செ.வெ.எண்:15 நாள்: 10.08.2021

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் மாதந்தோறும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்று மனுக்கள் பெறப்பட்டு வந்தது. தற்போது கொரோனா நோய் தொற்று காரணமாக பொதுமக்கள் அதிகம் கூடுவதைத் தவிர்க்கும் பொருட்டு 144 தடை உத்தரவு அமலில் உள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் ஆகஸ்டு 2021 மாதத்திற்கான **விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகிற 13.08.2021 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.00 மணி முதல் 1.00 மணிவரை இணையவழி காணொளி காட்சி வாயிலாக** நடைபெற உள்ளது. விவசாயிகள் மாவட்ட ஆட்சியரை நேரிடையாக தொடர்பு கொண்டு விவசாயம் சம்மந்தமான கோரிக்கை மனுக்கள் குறித்து தெரிவிக்க ஏதுவாக அரியலூர் மாவட்ட இணையதள முகவரி (https://ariyalur.nic.in)-ல் கூகுள் மீட் (Google Meet) ற்கான இணைப்பு கொடுக்கப்படும். மேற்படி இணைப்பில் சென்று விவசாயிகள் தங்கள் இல்லத்தில் இருந்தே நவீன கைபேசி (Smart Phone) மற்றும் இணையதள வசதி கொண்ட மடிக்கணினி (Laptop) அல்லது கணிப்பொறி (Computer) வாயிலாகவும், தங்களது கோரிக்கைகளை தெரிவிக்கலாம். இணையதளவசதி இல்லாத பொதுமக்கள் தங்கள் கிராமத்திற்கு அருகில் இருக்கும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் உள்ள பொது சேவை மையங்கள் மூலமாகவும், மற்றும் அருகில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு சென்று தங்களது கோரிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிக்கலாம். மேலும் விவசாயிகள் பொது சேவை மையத்தை அணுகும்போது சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள் உதவி புரிவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் கோரிக்கை மனு அளிக்க பொது சேவை மையத்திற்கு செல்லும்போது முகக்கவசம் கண்டிப்பாக அணிந்திருக்க வேண்டும் எனவும், சமூக இடைவெளியினை கடைப்பிடிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**